**செய்தி வெளியீடு எண் : 1912** **நாள் : 02.11.2022**

## செய்தி வெளியீடு

## மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள், "பசுமை விமான நிலையம் – தமிழகத்தின் விரைவான வளர்ச்சிக்கு தகுந்த தருணத்தில் மேற்கொள்ளப்படும் முயற்சி" குறித்து தொழில் மற்றும் வர்த்தக அமைப்பினரை சந்தித்து உரையாற்றினார்.

மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் இன்று (02.11.2022) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும், சென்னை தொழில் மற்றும் வர்த்தக சபையும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த **"பசுமை விமான நிலையம் – தமிழகத்தின் விரைவான வளர்ச்சிக்கு தகுந்த தருணத்தில் மேற்கொள்ளப்படும் முயற்சி"** குறித்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில திட்டக் குழு உறுப்பினரும் டாஃபே நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநருமான திருமதி. மல்லிகா சீனிவாசன் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில், துறை சார்ந்த வல்லுநர்கள் கலந்து கொண்டு அதிகரித்துவரும் விமானப் போக்குவரத்து மற்றும் சரக்குப் போக்குவரத்துக்கான தேவைகள், விமான நிறுவனங்கள் மற்றும் பயணிகள் கண்ணோட்டத்தில், தற்போதைய சென்னை விமான நிலையத்தில் எதிர்கொண்டு வரும் சவால்கள், இப்புதிய விமான நிலையம் அமைக்கப்படுவதற்கான அவசியம், புதிய விமான நிலையத்தில் பன்னாட்டு தரத்தில் அமைக்கப்பட வேண்டிய உட்கட்டமைப்பு வசதிகள், மற்றும் புதிய விமான நிலையம் அமைக்கப்படுவதால் மாநிலத்தில் தொழில் பெருக்கம், வர்த்தக வளர்ச்சி மற்றும் உருவாக்கப்படும் புதிய வேலைவாய்ப்புகள், இவற்றின் மூலம் கிடைக்கக்கூடிய பொருளாதார பலன்கள் குறித்து தங்களது கருத்துகளை எடுத்துரைத்தனர். தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ச. கிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் "அரசின் கண்ணோட்டத்தில் ஒட்டுமொத்த வளர்ச்சி" குறித்து விளக்கக் காட்சிகளுடன் விரிவாக எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெயஸ்ரீ முரளீதரன், இ.ஆ.ப., சென்னை தொழில் மற்றும் வர்த்தக சபையின் தலைவர் திரு. டி.ஆர். கேசவன், ஆசிய–பசிபிக் ஏவியேசன் இந்தியா பிரைவேட் லிட் மையத்தின் தலைமைச் செயல் அலுவலர் மற்றும் இயக்குநர் திரு. கபில் கௌல், (Blue Dart Aviation) ப்ளூ டார்ட் ஏவியேஷன் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி துளசி என்.மிர்சன்டனே, ஏர். கார்கோ கன்சல்டன்சி இன்டர்நேஷனல் சர்வீசஸ் (Air Cargo Consultancy International Services) அமைப்பின் நிறுவனர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் திரு. பி. பாலசுப்பிரமணியன், இந்தியாவின் தென் பிராந்திய பயண முகவர்கள் சங்கம் (Southern Region Travel Agents Association of India) அமைப்பின் மண்டல தலைவர் திருமதி டி. தேவகி மற்றும் பல்வேறு தொழில் மற்றும் வர்த்தக நிறுவனங்களின் தலைவர்களும், தலைமைச் செயல் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in